**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, நாகப்பட்டினம்**

முன்னிலை : திரு. J. ஆன்ஸ்ராஜா B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருக்குவளை

நீதித்துறை நடுவர் எண் 1, நாகப்பட்டினம்(மு.கூ.பொ)

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03-ம் நாள், திங்கட் கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.365/2024**

<u>CNR No.TNNG020056622024</u>

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண் (Name of the Police Station and Crime Number of offence) | மாவட்ட குற்றப்பிரிவு நாகப்பட்டினம் குற்ற எண்.01/2024 |
| 2. | எதிரியின் பெயர் (Name) | A1- முகமது சர்புதீன் (வயது 48/2024) த/பெ, சாஹுாத் அலி 36, புதுத்தெரு, நாகப்பட்டினம்.<br><br>A2. முகமது சித்திக் (வயது 40/2024) த/பெ. அப்துல் காதர் 41, புதுத் தெரு, நாகப்பட்டினம். |
| 3. | எதிரியின் தந்தை (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Date of Occurrence) | 05.02.2021 |
| 8. | புகார் தேதி (Complaint date) | 15.05.2024 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் (Apprehension date) | A1-04.08.2024<br>A2-07.06.2024 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on bail | A1- Bail on -12.09.2024<br>A2- Bail on -26.07.2024 |
| 11. | Commitment | Nil |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 09.04.2025 |



JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:32:33 +0530

| | | |
|---|---|---|
| | (Commencement of trial) | |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of trial) | 09.04.2026 |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | Nil |
| 15. | பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச -ன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s.313(1)(b) Cr.P.C) | 24.11.2025 |
| 16. | எதிரி தலைமறைவான விபரம் (Details of abscondence of accused) | Nil |
| 17. | எதிரியின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் (Date of Examination in chief and cross examination of witnesses) | see table below |
| 18. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட பல்வகை மனுக்கள் (Filing of miscellaneous petitions) | Nil |
| 19. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of filing of final report) | 15.10.2024 |
| 20. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த | A1-04.08.2024 -12.09.2024<br>A2-07.06.2024 -26.07.2024 |

| Witnesses | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 09.04.2025 | 09.04.2025 |
| PW2 | 23.04.2025 | 30.04.2025 |
| PW3 | 23.07.2025 | 23.07.2025 |
| PW4 | 06.08.2025 | 06.08.2025 |
| PW5 | 13.08.2025 | 13.08.2025 |
| PW6 | 22.08.2025 | 10.09.2025 |
| PW7 | 03.09.2025 | 24.10.2025 |
| PW8 | 07.11.2025 | 07.11.2025 |
| PW9 | 09.04.2026 | No cross stated by defence side. |


JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:32:44 +0530

| | | |
|---|---|---|
| | விபரம் (Period of Remand of Accused) | |
| 21. | மேலமை நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் (Grant of stay by superior Courts and the results thereof: and) | Nil |
| 22. | பாதிக்கப்பட்ட நபருக்கான இழப்பீடு உத்தரவு விபரம் (Details of Victim compensation order) | Nil |
| 23. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | 03.08.2026 |
| 24. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு(Service of copy Judgment of finding on Accused) | **முடிவில்**, 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் என தீர்மானித்து, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு இ.த.ச பிரிவு 406 ன் கீழான குற்றத்திற்கு 2 வருட கால மெய்க்காவல் சிறை தண்டனையும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், இ.த.ச பிரிவு 420 ன் கீழான குற்றத்திற்கு 2 வருட கால மெய்க்காவல் சிறை தண்டனையும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், (மொத்த அபராத தொகை ரூ.40,000/-) மேற்படி அபராத தொகையை கட்டத்தவறினால் அதன் பொருட்டு 3 மாத கால மெய்காவல் சிறை தண்டனையும் விதித்து பிரிவு 248(2) கு.வி.மு.ச வின் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 1, 2 எதிரிகள் மேற்படி சட்டப்பிரிவுகளுக்கான மெய்க்காவல் சிறை தண்டணையை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக 1வது எதிரி 04.08.2024 முதல் 12.09.2024 |



JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:32:52 +0530

| | | |
|---|---|---|
| | | வரையிலான சிறையிலிருந்த 39 நாட்களையும், 2 வது எதிரி 07.06.2024 முதல் 26.07.2024 வரையிலான சிறையிலிருந்த 50 நாட்களையும், தண்டனை காலத்திலிருந்து பிரிவு .428 கு.வி.மு.ச.வின் கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. |

**********

இவ்வழக்கானது 15.10.2024-ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 16.07.2026-ம் தேதியன்று என் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசுத்துறை வழக்கறிஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், 1 ஆம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. ஸ்ரீதரன் B.L., அவர்களும், 2 ஆம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. ஜெகபர் சாதிக் ஆவர்களும் முன்னிலையாகி, எடுத்துரைத்த வாதம் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

இவ்வழக்கின் வாதியான நூருல் அமீன் என்பவர் சொந்தமாக செல்போன் கடை வைத்துள்ளார். வாதியின் தாயாரிடம் நிலம் விற்ற பணம் இருப்பதை தெரிந்து கொண்ட 1 மற்றும் 2 எதிரிகள் வாதியை ஏமாற்றி பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிரிகள் இருவரும் தாங்கள் ஆன்லைனில் ரஹ்மத் டிரேடிங் லிமிடெட் என்ற நிறுவனம் நடத்தி வருவதாகவும், அந்த நிறுவனத்தில் முதலீடு செய்தால் மாதா மாதம் ஆபர் பணம் தருவதாக ஆசை


JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:33:05 +0530

வார்த்தை கூறி வாதியை நம்பவைத்து, அந்நிறுவனத்தில் ரூ.10,00,000/- முதலீடு செய்தால் மாதாமாதம் ரூ.12,500/- தருகிறோம் என்றும், 2 வருடங்கள் கழித்து முதலீடு செய்த ரூ.10,00,000/- பணத்தை முழுவதுமாக திருப்பி தருவதாக கூறியதை நம்பி வாதியும் ரூ. 10,00,000/- பணத்தை ரஹ்மத் டிரேடிங் லிமிடெட் என்ற நிறுவனத்தில் முதலீடு செய்வதற்காக 1 மற்றும் 2 எதிரிகளிடம் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் 10 மாத காலம் மட்டும் ரூ.12,500/- வீதம் பணம் கொடுத்துள்ளார்கள். அதன்பிறகு ஆபர் பணம் கொடுக்காததால் வாதி தனது முதலீட்டு பணத்தை எதிரிகளிடம் திருப்பி தருமாறு கேட்டுள்ளார். 1 மற்றும் 2 எதிரிகள் வாதிக்கு 13.03.2023 ஆம் தேதியன்று பதிவு செய்யப்படாத முத்திரை தாளின் மூலமாக இரண்டு மாத கால கெடுவிற்குள் பணத்தை திருப்பி தந்துவிடுவதாக கூறி ஒரு உறுதிமொழி பத்திரத்தை சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்துள்ளார்கள். அந்த பத்திரத்தில் கேட்டுக்கொண்ட காலத்தையும் தாண்டி பல மாதங்கள் ஆகியும் பணத்தை தராமல் இன்று தருகிறேன், நாளை தருகிறேன் என்று கூறி தொடர்ந்து வாதியை ஏமாற்றி வந்துள்ளார்கள். ஏற்கனவே கண்ட ஒப்பந்தத்தின்படி 10 மாதம் ரூ.12,500/- வீதம் கொடுத்தது போக மீதமுள்ள ரூ.8,75,000/- பணத்தை மேற்படி எதிரிகள் இருவரும் பணமோசடி செய்து குற்றம்புரிந்துள்ளார்கள். மேற்கண்ட குற்றத்திறக்கு வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில், எதிரிகளுக்கெதிராக இ.த.ச பிரிவுகள் 406,420 பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:33:13 +0530

2. இவ்வழக்கில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பில் எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின், அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு விளக்கி வினவ, பொய் வழக்கு என்றும், தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 மற்றும் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 முதல் 11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 03.02.2021 அன்று ரூ.5,00,000/- க்கு மாதம் ரூ.12,500/- வட்டி தருவதாக ரஹ்மத் டிரேடிங் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் கம்பெனி நடத்தி வருவதாகவும், எதிரிகள் இருவரும் கூறி 03.02.2021 ஆம் தேதியில் ரூ.5,00,000/- ஐ நான் 1 ஆம் எதிரியின் வீட்டிற்கு சென்று பணம் தந்ததாகவும், அப்போது தன்னுடன் தனது நண்பர் ஷாகுல்ஹமீது, ஜியாவுதின் ஆகியோர்கள்


JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:33:21 +0530

வந்ததாகவும், 1 ஆம் எதிரியின் வீட்டில் 2 ஆம் எதிரியும் இருந்ததாகவும், மேற்படி பணம் தருவதாக ஒப்புக்கொண்டு 1 ஆம் எதிரி 100 ரூபாய் பத்திரத்தாளில் தனது மனைவி நசீமாபேகம் பெயருக்கு எழுதிக்கொடுத்ததாகவும், 2 ஆம் எதிரி சாட்சி கையொப்பம் செய்ததாகவும், இதேபோல் 05.02.2021 அன்று ரூ.5,00,000/- க்கு மாதம் ரூ.12,500/- வட்டி தருவதாக எதிரிகள் இருவரும் கூறி மேற்படி தேதியில் ரூ-5,00,000/- ஐ தான் 1 ஆம் எதிரியின் வீட்டிற்கு சென்று பணம் தந்ததாகவும், அப்போது 2 ஆம் எதிரியும் உடன் இருந்ததாகவும், பின்னர் 2 நாட்கள் கழித்து 1 ஆம் எதிரி 100 ரூபாய் பத்திரத்தாளில் தன் பெயருக்கு எழுதிக்கொடுத்ததாகவும், 2 ஆம் எதிரி அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5. அ.சா.1 மேலும் தனது சாட்சியத்தில் எதிரிகள் ஒப்புக்கொண்டவாறு ரூ.12,500/- என மாதம் ரூ.25,000/- வீதம் 10 மாதங்கள் எதிரிகள் தனக்கு பணம் தந்ததாகவும், அதன்பிறகு எதிரிகள் பணம் தருவதை நிறுத்திக் கொண்டதாகவும், தான் பணம் தொடர்ந்து கேட்டதால் 13.03.2023 ஆம் தேதி தன்னிடம் ரூ.10,00,000/-ம் பெற்றுக்கொண்டதாகவும், அதனை 2 மாத காலத்திற்குள் கொடுத்துவிடுவதாகவும், ஒப்புக்கொண்டு அபுதல்ஹா நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் ஒப்புக்கொண்டு ஒரு உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், அதில் எதிரிகளும், சாட்சியாக செய்யது முபாரக் என்பவரும், முகமது சித்திக் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், ஆனால் மேற்படி எதிரிகள் ஒப்புக்கொண்டவாறு பணம் தராததால் நான் சுமார் 10 மாத காலம் காத்திருந்துவிட்டு நாகப்பட்டினம்,


JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:33:27 +0530

குற்றப்பிரிவில் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலமாக புகார், 03.02.2021 ஆம் தேதியன்று 1 ஆம் எதிரி அ.சா..1 ன் மனைவி நசீமா பேகம் என்ற பெயருக்கு எழுதிக் கொடுத்த பத்திரம், 05.02.2021 ஆம் தேதியில் 1 ஆம் எதிரி அ.சா.1ன் பெயருக்கு எழுதிக் கொடுத்த பத்திரம் மற்றும் 13.03.2023 ஆம் தேதி அபுதல்ஹா நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் எதிரிகள் எழுதிக் கொடுத்த உறுதிமொழி பத்திரம் ஆகியவைகள் முறையே அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்படுகிறது.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது சொந்த தம்பி என்றும், ரூ.5 லட்சத்திற்கு மாதம் ரூ.12,500/- தருவதாக எதிரிகள் தங்களிடம் சொன்னதாகவும், கடந்த 03.02.2021 ஆம் தேதி தானும், அ.சா.1ம் பாசித் மற்றும் சாகுல் ஹமீது என்பவரும் எதிரி சர்புதீன் வீட்டிற்கு சென்று அங்கு இருந்த எதிரிகள் இருவரிடமும் தலா 5 இலட்சம் வீதம் 10 லட்சம் ரூபாயை அ.சா.1ன் பெயரில் கொடுத்தோம் என்றும், எதிரிகள் தலா ரூ- 12,500 வீதம் இரண்டு தவணையாக மொத்தம் ரூ.25,000/- என பத்து மாதங்கள் அ.சா.1ன் GPAY எண்ணில் எதிரி சித்திக் என்பவரின் GPAY எண்ணில் இருந்து கொடுத்ததாகவும், அதன் பின்னர் பணம் எதுவும் தராத காரணத்தினால் தான் தானும், அ.சா.1ம் கேட்டபோது ஆறு மாதத்திற்குள் பணத்தை தந்து விடுவதாக எதிரிகள் கூறியதாகவும் அப்துல்லா என்ற நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் ஆறு மாதத்திற்குள் பணத்தை தந்து விடுவதாக எதிரிகள் 100 ரூபாய் பத்திர தாளில் எழுதிக் கொடுத்ததாகவும், அதன் பின்னரும் பணம் தராத காரணத்தினால் அ.சா.1


JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:33:33 +0530

புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ன் மூலமாக 2 ஆம் எதிரியுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.2 ன் சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரி சர்புதீன் தனக்கு சித்தி மகன் என்றும், அவர் அகமது டிரேடிங் கம்பெனியில் முதலீடு செய்தால் 5 இலட்சத்திற்கு மாதாமாதம் ரூ.12,500/- பணம் கொடுப்பதாக தன்னிடமும், தனது மகனிடமும் கூறியதாகவும், அதனடிப்படையில் தனது மகன் நூருல் அமீன் பெயரில் ரூ.5 லட்சமும், அவரது மனைவி பெயரில் ரூ.5 லட்சமும் கூடுதலாக 10 லட்சத்தை சர்பூதின் வீட்டில் வைத்து தனது மகன் தன்னிடம் இருந்து வாங்கியதாகவும், அதன்பிறகு 10 மாதங்கள் பேசியபடி 2 வது எதிரியின் வங்கி கணக்கில் இருந்து தனது மகன் நூருல் அமீன் என்பவரின் வங்கி கணக்கிற்கு மாதம் வீதம் ரூ.12,500/- வங்கி மூலமாக பணம் அனுப்பியதாகவும், அதன்பிறகு பணம் அனுப்பவில்லை என்றும், அதுசம்பந்தமாக தானும், தனது மகனும் பலமுறை எதிரி சர்புதீனிடம் கேட்டோம் என்றும், அதன்பிறகு ரூ.10 லட்சத்தை இரண்டு மாதம் காலக்கெடுவிற்குள் கொடுத்து விடுவதாக நோட்டரி வக்கீல் மூலம் முத்திரை தாளில் எழுதி கொடுத்ததாகவும், அதன்பிறகும் எதிரி தொகையை திருப்பி கொடுக்கவிலலை என்றும், மேற்படி எதிரிகள் மோசடி செய்தது தொடர்பாக தனது மகள் நூருல் அமீன் புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.4 தனது சாட்சியத்தில் கடந் 2021 மற்றும் 2022 காலகட்டத்தில் ஆஜர்


JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:33:42 +0530

எதிரிகள் ரஹ்மத் டிரேடிங் என்ற பெயரில் ஆன்லைன் டிரேடிங்க் செய்வதாகவும், அதில் அ.சா.1 ஆன நூருல் ஹமீது என்பவரை முதலீடு செய்யக்கோரியும், அதன்படி ரூ.10 லட்சம் முதலீடு செய்தால் மாதம் ரூ.12,500 தருவதாகவும், மேலும் முதலீடு செய்த தொகையை இரண்டு வருட காலம் கழித்து முழுவதுமாக திரும்ப கொடுத்து விடுவதாகவும் கூறியதாகவும், இது குறித்து அ.சா.1 என்னிடம் முதலீடு செய்ய சொல்லி கேட்டுக் கொண்டதாகவும், நான் முதலீடு செய்யவில்லை என்றும், அ.சா.1 ஆஜர் எதிரிகளிடம் 2021 ஆம் வருடம் தனக்கு சரியாக நியாபகம் இல்லை என்றும், ஆஜர் எதிரிகளிடம் ரூ.10 லட்சத்தை அ.சா.1 முதலீடு செய்ததாகவும், இந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் 10 மாதங்கள் மட்டுமே மாதம் ரூ.12,500/- அ.சா.1 ற்கு GPay மூலமாக ஆஜர் 2 வது எதிரியின் வங்கி கணக்கில் இருந்து அ.சா.1 ன் வங்கி கணக்கிற்கு கொடுத்தார்கள் என்றும், 10 மாதங்களுக்கு பிறகு எவ்வித பணமும் அளிக்கப்படவில்லை என்றும், அ.சா.1 ஆஜர் எதிரிகளிடம் கேட்டதற்கு 6 மாதங்களில் முதலீட்டு தொகையை தந்துவிடுவதாக சொல்லி எதிரிகள் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்ததாக அ.சா.1 தன்னிடம் கூறியதாகவும், ஆனால் அதன்படி பணம் தரவில்லை என்றும், இது தொடர்பாக அ.சா.1 புகார் அளித்திருந்ததாகவும், சம்பவம் பற்றி போலீசார் தன்னை விசாரித்ததாகவும் கூறியுள்ளார்.

9. அ.சா.5 தனது சாட்சியத்தில் 1 ஆம் எதிரி முகமது சர்புதின் என்பவர் தன் உடன்பிறந்த தம்பி ஆவார் என்றும், 2 ஆம் எதிரி தனது தம்பியின் நண்பர் என்றும்,

 JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:33:49 +0530

நீதிமன்ற விசாரணையில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய கையொப்பம் இல்லை என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 15.05.2024 ஆம் தேதி 10.30 மணிக்கு தான் நிலையப் பொறுப்பிலிருந்தபோது புகார்தாரர் நூருல் அமீன் கடந்த 28.02.2024 ஆம் தேதியன்று ந.க எண். C2/1881/2024 நாள் 28.02.2024 ஆம் தேதி கொடுக்கப்பட்ட புகார் மனுவின் பேரில் நாகப்பட்டின மாவட்ட குற்றப்பிரிவு ந.க எண். 43/DCB/2024 நாள்.28.02.2024 ஆம் தேதி நடப்பு தாள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வந்த புகார் மீது உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று 15.05.2024 ஆம் தேதி 10.30 மணிக்கு நாகப்பட்டினம், மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண்.01/2024 இ.த.ச பிரிவுகள் 406,420 ன் படி வழக்கு பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.6 ன் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. அ.சா.7 தனது சாட்சியத்தில் கடந்த 15.05.2024 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நாகப்பட்டினம்,மாவட்ட குற்றப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் ஜோதி நிலைய பொறுப்பில் இருந்தபோது நாகப்பட்டினம் நூருல் அமீன் என்பவர் நாகப்பட்டினம், மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனுவின் பேரில் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வந்த நிலையில், வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 1 ஆம் எதிரியை



JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:33:57 +0530

கடந்த 04.08.2024 ஆம் தேதியன்று மதியம் 02.00 மணிக்கு கைது செய்து நாகப்பட்டினம் மாவட்ட குற்றப்பிரிவிற்கு அழைத்து வந்து ஆஜர் செய்ததாகவும், பின்னர் 1 ஆம் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், சாட்சிகள் முகமது பக்ரூதீன் மற்றும் சதாம் உசைன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.8 தனது சாட்சியத்தில் கடந்த 17.06.2024 ஆம் தேதி மதியம் 02.00 மணிக்கு வழக்கின் 2 ஆம் எதிரியை சாட்சிகள் முன்னிலையில் குற்றக் காரணம் கூறி கைது செய்தபோது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதனை சாட்சிகள் முகமது பக்ரூதீன் மற்றும் சதாம் உசைன் ஆகியோர் முன்னிலையில் வாக்குமூலமாக பதிவு செய்ததாகவும், அதன்பேரில் வழக்கின் வாதிக்கும், எதிரிகளுக்கும் ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்த நகல்கள் மூன்றினை அவரை அழைத்துக் கொண்டு அவரது வீட்டிலிருந்து எதிரி ஆஜர் செய்ததாகவும், அதனை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரியையும், வழக்கு சொத்தையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், வழக்கு சொத்தை படிவம் 95 மூலம் ஆஜர்படுத்தியதாகவும், பின்னர் கடந்த 04.08.2024 ஆம் தேதி உதவி ஆய்வாளர் 1 ஆம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து கடந்த 26.08.2024 ஆம் தேதி இவ்வழக்கின் குற்ற



JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:34:03 +0530

அறிக்கையை அதே சட்டப்பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.அ.சா.8 ன் மூலமாக ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி , கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 95 ஆகியவைகள் முறையே அ.த.சா.ஆ.7 முதல் அ.த.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்படுகிறது.

13. அ.சா.9 தனது சாட்சியத்தில் தங்களது வங்கிக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் தங்களது வங்கியில் உள்ள கணினியில் finacle மென்பொருளில் இருந்து அ.சா.1 வங்கி கணக்கு எண். 13510005030 5544 என்பவரது அ.த.சா.ஆ.10 ஆன 01.02.2021 முதல் 31.12.2023 வரையிலான வங்கி கணக்கிற்கான பரிவர்த்தனையினை பதிவிறக்கம் செய்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாகவும், அ.சா.9 ன் அடையாள அட்டையின் நகலான அ.த.சா.ஆ.11 ஐ தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து பிரிவு கு.வி.மு.ச 313 (1)(ஆ)-BNS ன் கீழ் கேள்வி எழுப்ப பொய் சாட்சி என்றும், வழக்கு குறித்து கேள்வி எழுப்ப பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

15. எனவே, எதிரிகளுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில்



JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:34:10 +0530

சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

16. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

17. Now it is necessary the look after the ingredients of sec.406, and 420 IPC

**( a) Essential Ingredients. The section requires-** U/s.406 IPC

(i) Entrusting any person with property or with any dominion over property;

(ii) The person entrusted (a) dishonestly misappropriating or converting to his own use that property; or

(b) dishonestly using or disposing of that property or wilfully suffering any other person so to do in violation

(i) of any direction of law prescribing the mode in which such trust is to be discharged, or

(ii) of any legal contract made touching the discharge of such trust.

**( a) Essential Ingredients. The section requires-** An offence under Section 420 has following essentials could be

(i) There must be deception i.e. the accused must have deceived someone,

(ii) That by the said deception. The accused must induce a person,

(a) to deliver any property; or

(b) to make, alter or destroy the whole or part of the valuable security or any thing which is signed or sealed and which is capable of being converted into a valuable property.



JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:34:20 +0530

iii) That the accused did so dishonestly.

18. இந்நீதிமன்றமானது அ.சா.1 சாட்சியத்தையும், அ.த.சா.ஆ.2,3,4 பரிசீலனை செய்ததில் 1 ஆம் எதிரியானவர் அ.சா.1க்கு மாமா என்பதும், 2 ஆம் எதிரியானவர் அ.சா.1க்கு 5 ஆம் வகுப்பு முதல் வகுப்பு தோழன் என்பது தெரியவருகிறது. எதிரிகள் அ.சா.1யிடம் தாங்கள் ரஹமத் டிரேடிங் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் கம்பெனி நடத்தி வருவதாகவும், அவர்கள் கம்பெனியில் ரூ.5,00,000/- முதலீடு செய்தால் மாதம ரூ.12,500/- வட்டி தருவதாகவும், பின்பு 2 ஆண்டுகள் கழித்து மேற்படி தொகையை அ.சா.1 யிடமே திரும்பி ஒப்படைத்து விடுவதாகவும் ஆசை வார்த்தைகள் கூறியுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. அதனடிப்படையில் தான் அ.சா.1 ஆனவர் கடந்த 03.02.2021 ஆம் தேதியில் ரூ.5,00,000/-ஐ 1 ஆம் எதிரியிடம் கொடுத்துள்ளார் என்பதும், அதை 1ஆம் எதிரியும், 2 ஆம் எதிரியும் பெற்றுக்கொண்டார்கள் என்றும், பெற்றுக்கொண்டதற்கு ஆதரவாக அ.த.சா.ஆ.2 ஆன பத்திரத்தை அ.சா.1ன் மனைவியான நசீமா பேகம் பெயரில் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. மேலும், 05.02.2021 ஆம் தேதியில் ரூ.5,00,000/-ஐ மீண்டும் அ.சா.1 ஆனவர் 1 ஆம் எதிரியின் வீட்டிற்கு சென்று கொடுத்துள்ளார் என்பதும், அப்போது 2 ஆம் எதிரியும் அங்கு இருந்துள்ளார் என்பதும், அ.சா.1 ஆனவர் சாட்சியமளித்துள்ளார். எதிரிகள் பணம் பெற்றுக் கொண்டு அ.சா.1ன் பெயருக்கு 100 ரூபாய் பத்திரத்தில் அ.த.சா.3 ஆன பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்பதும் தெரிய வருகிறது. இந்நீதிமன்றமானது அ.சா.ஆ.2 மற்றும் 3 ஐ பரிசீலனை செய்ததில் 1 ஆம்


JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:34:27 +0530

எதிரியானவர் ஏஜெண்ட் என்ற முறையிலும், 2 ஆம் எதிரி சாட்சி என்ற முறையிலும் அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளார்கள் என்பதும் புலப்படுகிறது. மேலும், எதிரிகள் 3.02.2021 ஆம் தேதியில் ரூ.5,00,000/-மற்றும் 05.02.2021 ஆம் தேதியில் ரூ.5,00,000/- பெற்றுக் கொண்டும், மேற்படி தொகைக்கு மாதம் ரூ.12,500/- அ.சா.1 க்கு மற்றும் அ.சா.1 ன் மனைவியான நசிமாபேகத்திற்கு மாதம் ரூ.12,500/- கொடுப்பதாகவும் மேலும், ரூ.5,00,000/- மற்றும் ரூ.5,00,000/- தொகையை திருப்பி கொடுத்துவிடுவதாகவும் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆவணங்களில் எழுதிக் கொடுத்துள்ளார்கள் மற்றும் சாட்சியாகவும் இருந்துள்ளார்கள்.

19. எதிரிகள் வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள ரூ.5,00,000/- மற்றும் ரூ.5,00,000/- பணத்தை ஹாஜா முபாரக் என்பவர் தான் பெற்றுக் கொண்டார் என்று வாதித்துள்ளார். மேலும், மேற்படி ஹாஜா முபாரக் அவர்கள் இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கப்படவில்லை என்றும் வாதிட்டுள்ளார். மேற்படி எதிரிகளின் வழக்கறிஞர் வாதுரையானது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால் அ.சா.1 ஆனவர் அவருடைய புகாரிலோ மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலோ ஹாஜா முபாரக் தான் பணம் கேட்டார் என்றும், மற்றும் ஹாஜா முபாரக்கிடம் தான் பணம் கொடுத்ததாகவோ புகாராகவோ, சாட்சிய வாக்குமூலமாகவோ கொடுக்கவில்லை.


JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:34:34 +0530

20. அ.சா.2 ஆனவர் கண்ணுற்ற சாட்சியாவார். அ.சா.2 ஆனவர் அ.சா.1 அவர்கள் எதிரிகளுக்கு ரூ.5,00,000/- மற்றும் ரூ.5,00,000/- கொடுக்கும் போது உடனிருந்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும், அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆன ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரியானவர்கள் முறையாக டிரேடிங் செய்வதற்கு ஆவணங்கள் ஏற்படுத்தவில்லை என்பது தெரிய வருகிறது. அ.சா.1 ஆனவர் தன்னுடைய சாட்சியத்தில் எதிரியானவர்கள் 10 மாதங்களுக்கு ரூ.12,500/- + ரூ.12,500/-கொடுத்துள்ளார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். அதற்கு பின்பு எதிரியானவர்கள் பணத்தை செலுத்தவில்லை என்றும், அதனால் எதிரிகளிடம் ரூ.10,00,000/- கோரியபோது எதிரியானவர்கள் ரூ.10,00,000/- பெற்றுக்கொண்டார்கள் என்பதும், பின்பு மாதம் மாதம் ரொக்கமாக பணம் செலுத்தியதாகவும், பின்பு தற்போது பணம் செலுத்த முடியாத காரணத்தினால் ரூ.10,00,000/-ஐ திருப்பி கொடுத்துவிடுவதாக 1 ஆம் எதிரியானவர் அ.சா.ஆ. 3 உறுதி மொழி பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். ஆகவே, எதிரிகள் ரூ.10,00,000/- ஐ பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதும், அதை 1 ஆம் எதிரி திருப்பி செலுத்தி விடுவதாகவும் உறுதிமொழி அளித்துள்ளதாலும், ரூ.10,00,000/- எதிரிகள் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்பது நிரூபணம் ஆகியுள்ளது.

21. அ.சா.1 ஆனவர் தன்னுடைய சாட்சியத்தில் எதிரிகள் மாதம் மாதம் ரூ.12,500/- + ரூ.12,500/- 10 மாதங்களுக்கு கொடுத்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். அதற்கு


JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:34:49 +0530

ஆதரவாக அ.சா.ஆ.10 ஆன வங்கி கணக்கு பதிவேட்டை தாக்கல் செய்துள்ளார். இந்நீதிமன்றமானது அ.சா.ஆ.10 ஆன வங்கி கணக்கு பதிவேட்டை பரிசீலனை செய்தபோது 2 ஆம் எதிரியால் 05.06.2021 ஆம் தேதியன்று 2 முறை ரூ.12,500/- அ.சா.1 ன் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது என்பது தெரிய வருகிறது. அதற்கு பின்பு எதிரிகள் பணம் செலுத்தவில்லை என்பதும் தெரிய வருகிறது. அ.சா.1,அ.ச.2 மற்றும் அ.சா.4 சாட்சிகளை பரிசீலனை செய்ததில் எதிரிகள் அ.சா.1 டம் தவறான அறிவுறுத்தலின் பேரிலும், ஆசை வார்த்தைகள் கூறியும், டிரேடிங்குண்டான விதிமுறைகளை பின்பற்றாமலும், அ.சா.1 ஐ ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் ரூ.5,00,000/-+ரூ.5,00,000/- ஆக மொத்தம் ரூ.10,00,000/- ஐ கடந்த 2021 ஆண்டு பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும், பெற்றக் கொண்ட பணத்தை திருப்பி செலுத்தாமல் பணத்தை Nila Pay என்ற நிறுவனத்தில் முதலீடு செய்து சுயலாபம் அடைந்துள்ளார் என்பதும் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

22. அரசு தரப்பால் இ.த.ச பிரிவுகள் 406 மற்றும் 420 க்கு உண்டான முக்கிய கூறுகளை எதிரிகள் செய்துள்ளார்கள் என்பது அரசு தரப்பால நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 406 மற்றும் 420 ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானிக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்க தீர்மானிக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படும் நபர்கள் ஆகிறார்கள்.



JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:34:56 +0530

23. எதிரிகளுக்கு வழங்கவேண்டிய தண்டனை குறித்து வினா வினவியபோது எதிரிகள் கீழ்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

" 1 மற்றும் 2 எதிரிகள் பதில் எதுவும் கூறவில்லை".

24. **முடிவாக**, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 406 மற்றும் 420 க்கு கீழான குற்றத்திற்கு 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் என தீர்மானித்து, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு இ.த.ச பிரிவு 406 ன் கீழான குற்றத்திற்கு 2 வருட கால மெய்க்காவல் சிறை தண்டனையும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், இ.த.ச பிரிவு 420 ன் கீழான குற்றத்திற்கு 2 வருட கால மெய்க்காவல் சிறை தண்டனையும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், (மொத்த அபராத தொகை ரூ.40,000/-) மேற்படி அபராத தொகையை கட்டத்தவறினால் அதன் பொருட்டு 3 மாத கால மெய்காவல் சிறை தண்டனையும் விதித்து பிரிவு 248(2) கு.வி.மு.ச வின் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 1, 2 எதிரிகள் மேற்படி சட்டப்பிரிவுகளுக்கான மெய்க்காவல் சிறை தண்டணையை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக 1வது எதிரி 04.08.2024 முதல் 12.09.2024 வரையிலான சிறையிலிருந்த 39 நாட்களையும், 2 வது எதிரி 07.06.2024 முதல் 26.07.2024 வரையிலான சிறையிலிருந்த 50 நாட்களையும், தண்டனை காலத்திலிருந்து பிரிவு 428 கு.வி.மு.ச.வின் கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:35:04 +0530

25. இவ்வழக்கில் எதிரிகள் மற்றும் எதிரிகள் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.08.03 12:35:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.1(முகூ.பொ)

நாகப்பட்டினம்.

**இணைப்பு:**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. நூருல் அமீன் ( நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. ஜியாவூதின் |
| அ.சா.3 | சாகுல் ஹமீது நாச்சியார் |
| அ.சா.4 | திரு. சாகுல் ஹமீது |
| அ.சா.5 | முகமது பக்ரூதீன் |
| அ.சா.6 | திரு. ஜோதி |
| அ.சா.7 | திருமதி. வேம்பு |

| | |
|---|---|
| அ.சா.8 | திரு. கண்ணதாசன் |
| அ.சா.9 | திரு. சேவியர் காட்சன் |

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.10.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 03.02.2021 | 1 ஆம் எதிரி அ.சா.1 ன் மனைவி நசீமா பேகம் என்ற பெயருக்கு எழுதிக் கொடுத்த பத்திரம், |
| அ.சா.ஆ.3 | 05.02.2021 | 1 ஆம் எதிரி அ.சா.1 ன் பெயருக்கு எழுதிக் கொடுத்த பத்திரம் |
| அ.சா.ஆ.4 | 13.03.2023 | அபுதல்ஹா நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் எதிரிகள் எழுதிக் கொடுத்த உறுதிமொழி பத்திரம் |
| அ.சா.ஆ.5 | -- | 2 ஆம் எதிரியுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.2 ன் சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | 15.05.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | -- | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8 | 07.06.2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.9 | 07.06.2024 | படிவம் 95 |
| அ.சா.ஆ.10 | -- | 01.02.2021 முதல் 31.12.2023 வரையிலான வங்கி கணக்கிற்கான பரிவர்த்தனையினை பதிவிறக்க நகல் |
| அ.சா.ஆ.11 | -- | அ.சா.9 ன் அடையாள அட்டையின் நகல் |

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்று பொருள்: இல்லை.**

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள்: இல்லை.**

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:35:21 +0530

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.08.03 12:35:34 +0530

நீதித்துறை நடுவர் எண்.1(முகூ.பொ)

நாகப்பட்டினம்

**நகல் - மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.